**O.S.No. 19/2018**

**PW1 : விஜயாபுரி** தேதி 14.07.2025

**வாசா1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 5 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு 1993 ல் திருமணம் நடைபெற்றது. உங்கள் சகோதிரிகள் மூவருக்கும் எப்போது திருமணம் ஆனது என்றால் 1982 ல் பூங்கொடிக்கும், ருக்மணிக்கு 1983 லும், தனலட்சுமிக்கு 1987 ல் திருமணம் ஆனது. அப்போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 30 வயது இருக்கும். எனக்கு திருமணம் ஆகி என் பெற்றோர் என்னுடன் இருந்தார்கள் என்றால் 4 வருடங்கள் இருக்கும். அதன் பின்னிட்டு என் பெற்றோர்கள் என் சகோதரி வீட்டுக்கு போய் விட்டார்களா என்றால் பூர்வீக வீட்டில் இருந்தார்கள் நான் தோட்டத்தில் குடியிருந்தேன். என் பெற்றோர்கள் இறந்தது எந்த வீட்டில் என்றால் பூர்வீக வீட்டில் தான் இறந்தார்கள். பூர்வீக வீட்டில் இறந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பெற்றோர்கள் பெரிய அக்கா 1 ம் பிரதிவாதி பூங்கொடி வீட்டில் இருந்தார்கள் என்றும் அவர்கள் இறக்கும் வரை அவர் தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. பூங்கொடியின் கணவர் ஊர் சாவடிபாளையம். என் பெற்றோர்கள் சாவடிபாளையத்தில் தான் இறந்தார்கள் என்றும் இறப்பு சான்றிதழ் அந்த சாவடிபாளையம் முகவரியில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பூங்கொடிக்கு 1987 லும், ருக்குமணிக்கு 1990 பின்னிட்டு தான் திருமணம் நடந்தது என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தான் திருமணத்தை நடத்தி வைத்தேன். என்னுடைய பிரமாண பத்திரக்கையில் 1987 ல் பூங்கொடிக்கு திருமணம் நடந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் திருமண பத்திரிக்கை என் தங்கை திருமண பத்திரிக்கை தான் ஆனால் அந்த வருடத்தில் திருமணம் நடைபெற்றவில்லை. எ கா மற்றொரு

பத்திரிக்கை தனலடசுமி உடையது என்றால் இல்லை. 10 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றும் அவர்களுடைய திருமண பத்திரிக்கைகள் என்றால் சரியல்ல. 1ம் ஐயிட்ட சொத்தில் 3.75 சென்ட்டில் என் தந்தை கட்டியிருந்த கோழிப்பண்ணை இருந்ததா என்றால் சரியல்ல அது நான் கட்டியது. என்னுடைய வழக்கிலோ என்னுடைய சகோதரிகள் தாக்கல் செய்த அ வ எண். 306/19 எதிர் வழக்குரையிலோ அந்த கோழிப்பண்ணையை நான் கட்டியதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல நான் என்னுடைய வழக்கில் சொலியிருக்கிறேன். நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல 1 ஐ 1980 ல் கிணறு வெட்டப்பட்டது என்றால் சரிதான் சாட்சி பின்னிட்டு 1976 ல் கிணறு வெட்டப்பட்டது என்று சொல்கிறார். கிணறுவெட்டி 3 வருடம் கழித்து போர் போடப்பட்டது என்றால் சரியல்ல 2001 ல் போர் வெல் போட்டேன். 2001 ல் போர் போட்டதாக என்னுடைய வழக்கிலோ அ வ எண். 306/19 எதிர் வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருக்கிறேன். 1ம் ஐயிட்ட சொத்தில் உள்ள் மின் இணைப்பு என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். எத்தனை மின் இணைப்பு உள்ளது என்றால் 2 உள்ளது அது என் தந்தை பெயரில் தான் உள்ளது. 2 மின் இணைப்பையும் என் அப்பா அவர் பெயரில் விண்ணப்பம் செய்து அவருடைய வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஒரு மின் இணைப்பை நான் வாங்கினேன். கிணறு வெட்டி 3 வருடம் கழித்து போர் போடப்பட்டது என்றால் சரியல்ல. கிணறு வெட்டியதில் இருந்து 10 - 12 வருடம் கழித்து தான் போர் போட்டேன். கிணறு வெட்டிய காலத்தில் 150 தென்னம்பிள்ளை வைக்கபட்டது என்றால் சரியல்ல. 1 ஐயிட்ட சொத்தில் சுமார் 50 தென்னைமரம் தற்போது உள்ளது. அதில் தக்காளி,வாழை, மஞ்சள் ஆகியவற்றை பயிர் செய்கிறேன் என்றால் சரியல்ல. மானாவாரி பூமியை என் தந்தை தான் போர் போட்டு தக்காளி தென்னை மஞ்சள் ஆகியவற்றை பயிர் செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் தந்தை செலவு செய்து போர் போட்டதால் தான் அவர் பெயரில் மின்

இணைப்பு வந்தது என்றால் சரியல்ல. பட்டா என் தந்தை பெயரில் இருப்பதால் மின் இணைப்பு கொடுத்தார்கள். மேற்படி விவரம் தவறானது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிணற்றுக்குள்ளும் ஒரு போர் போடப்பட்டது என்றால் சரிதான் அது என் தந்தை தான் போட்டார் என்றால் சரியல்ல. 1 ம் ஐயிட்ட சொத்தில் தார்சு வீடு உள்ளது என்றால் சரிதான். 2010 ல் கட்டப்பட்டதா என்றால் 2010 கட்ட ஆரம்பித்து 2012 ல் முடிந்தது. அந்த வீட்டிற்குண்டான மின் இணைப்பு வரி என் தந்தை பெயரில் இருந்தது என்றால் சரியல்ல என் பெயரில் இருந்தது. அந்த வீட்டை என் தந்தை கட்டினார் என்றால் சரியல்ல. நான் முன்னால் நின்று இந்த வீட்டை கட்டியதற்கு ஏற்பாடு செய்ததால் சில ஆவணங்கள் என் பெயரில் ஏற்பட்டது என்றும் அதற்கு என் தந்தை தான் தொகை கொடுத்தார் என்றும் அதனால் என் பெயரில் சில ஆவணங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. யாருடைய பெயரில் பட்டா உள்ளதோ அவர் பெயரில் கந்தா ரசீது கொடுப்பார்களா என்றால் அவ்வாறு இல்லை என் பெயரில் நான் கந்தா ரசீது வாங்கியிருக்கிறேன். கந்தாய ரசீதுகள் என் தந்தை சார்பில் கொண்டு சென்று நான் செலுத்தியதால் என் பெயருக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதே போல் தான் வீட்டு வரியும் என் தந்தை பெயரில் செலுத்திய பிறகு நான் என் பெயரில் பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் நாளது வரை என் அப்பா பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். போர் போடுவதற்கு என் தந்தை தான் தொகை கொடுத்தார் என்றும் நான்முன் நின்று செய்ததால் என் பெயரில் ரசீது பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. போர் போட்டது மற்றும் அதற்கான மோட்டார் பொருத்தியது மற்ற இதர வற்றிக்கு என் அப்பா தான் பணம் கொடுததார் என்றும் நான் பணம் செலுத்தி என் பெயரில் ரசீது பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கும் எனக்கும் எப்போது விரோதம் ஏற்பட்டது என்றால் கடைசி வரை நாங்கள் பிரியமாக தான் இருந்தோம். என் பெற்றோர் இறந்ததற்கு நான் இழவிற்கு செல்லவில்லை என்றால் போனேன் எல்லோரும் தடுத்து நிறுத்தி விட்டார்கள். யார் தடுத்தார்கள் என்றால் என் தங்கைகள் தடுத்துவிட்டார்கள் கேட்டை மூடிவிட்டார்கள். என்

தந்தை எங்களுடைய பூர்வீக வீட்டில் தான் இறந்தார். நான் அங்கு சென்றேன். என் பெற்றோர் என்னை விட்டு பிரிந்து சென்றார்கள் 1996 ல் இருந்து என் பெற்றோர் தனியாக குடியிருந்தார்கள். என் தந்தைக்கும் எனக்கும் உறவே இல்லாத காரணத்தினால் தான் என் அப்பா இறந்த பிறகு நான் போகவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த போது என் உறவினர்கள் என் வீட்டில் இருந்தார்கள். எல்லாரும் தடுத்ததால் தான் நான் வந்து விட்டேன். என் தந்தை சாயந்தரம் இறந்து விட்டார் நேரம் தெரியாது ¾ மணி நேரம் கழித்து போனேன். பங்காளிகள் இருந்தார்கள் என்றால் சொந்த பங்காளிகள் இல்லை வேறு பங்காளிகள் இருந்தார்கள். சொந்த பங்காளிகள் எங்கள் வீட்டிற்கு இழவு கேட்க வந்தார்கள். அவர்கள் அங்கு போகவில்லை. ஏன் பங்காளிகள் என் அப்பா இறந்ததற்கு போகாததற்கு என்ன காரணம் என்றால் என்னை என் தங்கைகள் தடுத்தால் அவர்கள் செல்லவில்லை. நான் மட்டும் தான் என் அப்பா இழவிற்கு போகவில்லை என்றும் மற்ற உறவினர்கள் மற்றும் பங்காளிகள் வந்தார்கள் என்றால் சரியல்ல. 2 ம் ஐயிட்ட சொத்தில் பொது கிணறு உள்ளது. அதில் என்னுடைய பாத்தியத்தில் 50 தென்னம்பிள்ளை உள்ளது என்றால் இல்லை. அதில் மின் இணைப்பு இருந்தது 20 வருடத்திற்கு முன்பாக எடுத்து சென்று விட்டார்கள் அது மானாவாரி பூமி தான். அதில் வாழை தென்னை விளைய கூடி பூமி என்றால் சரியல்ல. அதில் கிணறு இல்லை என்று வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றும் கிணற்றில் தண்ணீர் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஒரே பங்காளி தான். என் தாத்தா ரங்கையகவுண்டருக்கு என் அப்பா ஒரே மகன். ஒரே பங்காளி என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. யார் எனக்கு சாட்சி அளிக்க வருவார்களோ அவர்களை மட்டும் பங்காளி என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 ஐயிட்ட சொத்தில் வாழை தென்னை பயிர்கள் உள்ளது என்றால் சரியல்ல. இரண்டும் மானாவாரி பூமி என்று சொல்கிறேன். 1 மற்றும் 2 ஐயிட்ட சொத்துகளில் வரும் வருமானம் என் தந்தை வைத்திருந்த கோழிப்பண்ணை ஆகிய வருமானத்தை கொண்டு தான் 3 ம் ஐயிட்ட சொத்தின் பாதியை என் தந்தை 21.1.87 தேதியில் கிரையம் வாங்கினார் என்றால்

சரியல்ல அது நான் வாங்கியது. வாசாஆ 7 கிரைய பத்திரம் என் தந்தை பெயரில் உள்ளது. என் தந்தை பெயரில் கிரையம் வாங்கினால் பெண் பிள்ளைகளும் பங்கிற்கு வருவார்கள் என்பது தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. அது நான் வாங்கிய கிரையம் தான் அது என் அப்பா பெயரில் எழுதப்பட்டது. அப்பாவிற்கு அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதப்பட்டதா னஎ்றால் ஆமாம். என் அப்பாவிற்கு வாசாஆ 7 அந்தஸ்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் 13 ½ ஏக்கர் நஞ்சை பூமி அவரிடம் இருந்தது என்றும் நான் கிரையம் வாங்கி அந்தஸ்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாசாஆ 7 ல் கிரைய தொகை 30 ஆயிரம் கொடுக்கப்பட்டது. 21.1.87 ல் ரூ.30 ஆயிரம் என் கைவசம் உள்ளதா என்பதற்காக ஆவணம் ஏதாவது இருந்ததா என்றால் இல்லை. அந்த தேதியில் எனக்கு தனியாக வருமானம் இருந்து என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. நான் கோழி, மாடு வியாபரம் செய்ததற்கான ஆவணம் எதுவும் இல்லை. நான் எந்த காலத்திலும் மாட்டு வியாபாரமோ கோழி வியாபாரமோ செய்ததில்லை என்றால் சரியல்ல. என் தந்தை தான் மாட்டு வியாபாரம் கோழி வியாபாரம் செய்தார் என்றால் சரியல்ல. வாசாஆ 7 கிரைய பத்திரத்தின் போது எனக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றும் அந்த கிரையத்திற்கான தொகை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 7 கிரைய தொகையை என் தகப்பனாரால் கொடுக்கப்பட்டு கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. 1987 என் வயது 30 என்றும் எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். வாசாஆ 7 என் அப்பா சொத்து என்றால் சரியல்ல. 3ம் ஐயிட்ட சொத்திற்கும் என் அப்பா பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். கிரைய சொத்தும் என் அப்பா பெயரில் தான் நாளது வரை உள்ளது. ஏன் என் பெயரில் பட்டா மாற்றம் செய்து கொள்ளவில்லை என்றால் நம்பிக்கை தான். என் தந்தை வருமானத்தை கொண்டு கிரையம் பெற்றதால் தான் நாளது வரை என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் என் தரப்பு அர்ஜூனன் சதாசிவம் பழனிச்சாமி ஆகியோரை விசாரிக்க போகிறேன்.

அர்ஜூனன் பக்கத்து தோட்டத்துகாரர். அர்ஜூனனுக்கு பெருந்துறையில் நடந்த வழக்கில் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தேன். அதனால் தான் இந்த வழக்கில் எனக்கு சாட்சியம் அளிக்க வருகிறார் என்றால் அவ்வாறு இல்லை. சதாசிவம் என் சொந்தமுமில்லை எங்கள் கிராமத்தை சேர்ந்தவர். எனக்கு பழக்கமானவர் நண்பரல்ல. பழனிசாமி மூங்கில்பாளைத்தை சேர்ந்தவர் அவரும் எனக்கு உறவினர் அல்ல. எங்கள் ஊரில் இருந்து மூங்கில்பாளையத்திற்கு ½ கி மீ தூரத்தில் உள்ளது. அர்ஜூனன் இணை பொழிகாரர் அல்ல என்றும் 4 – 5 நிலம் தள்ளி உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 3 நபர்களும் எனக்கு வேண்டியவர்கள் என்றும் என் சொல்லுக்கு கட்டுப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல.